விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 03 திங்கட்கிழமை (18.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 354

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## குறிகாட்டுவான் - மன்னார் ஊடாக யாழ்.உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி

### ஜனவரியிலிருந்து சாத்தியமாகும் எனத் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து உற்பத்தி செய்யும் பொருட்களை குறிகாட்டுவான்-மன்னார் ஊடாக கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிகாட்டுவான்-மன்னார் ஊடான படகுப் போக்குவரத்துக்கள் ஜனவரிமுதல் மேற்கொள்ளப்படக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 வீதி மூடப்பட்டதையடுத்து யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் புகையிலை, திராட்சை,வெங்காயம் உட்பட்ட பொருட்கள் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் நட்டங்களை எதிர்நோக்கினர்.

இதனை கருத்தில் கொண்டு குறிகாட்டுவானிலிருந்து மன்னாருக்கு படகுகளில் அவற்றை கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.நான்கு மணித்தியாலங்களில் குறிகாட்டுவானிலிருந்து மன்னாருக்கு செல்லலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று மன்னாரிலிருந்து தேங்காய் உள்ளிட்ட சிறுபொருள்களை படகுகளில் குறிகாட்டுவானுக்கு கொண்டுவரவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# பெப்ரவரியில் மீண்டும் பேச்சு நோர்வே ஊடாக அரசு முயற்சி?

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை அடுத்த வருடம் பெப்ரவரியில் மேற்கொள்வதற்கு அரசு முயற்சித்து வருவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அரச சமாதான செயலகம் நோர்வேத் தரப்பினருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர் பான உத்தியோக பூர்வமான தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி வழங்கும் திட்டம் எதுவும் இல்லை

### இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி

(புதுடில்லி)

இலங்கை இராணுவத்துக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்தார்.

வங்கதேச போரில் இந்தியா வெற்றி பெற்றதன் 35-வது ஆண்டு விழாவை முன்னிட்டு (விஜய் திவாஸ்) டில்லி இந்தியா கேட்டிலுள்ள போர் வீரர்கள் நினைவுச்சின்னத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி மற்றும் முப்படைத் தளபதிகள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் ஏ.கே.அந்தோனி நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் குத்திக் கொலை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பாண்டியன்தாழ்வுப் பகுதியில் இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் போத்தலால் கழுத்தில் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் வேலை முடிந்து திரும்பிய போதே வீட்டுக்கு முன்னால் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் யாழ்.நகரில் தேநீர்ச் சாலை ஒன்றில் பணிபுரிந்து வரும் மூன்று பிள்ளைகளின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறினால் தமிழீழத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்



### தொல்.திருமாவளவன் வலியுறுத்தல்

(சென்னை)

ஈழத்தில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக மனிதாபிமானப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஈழத் தமிழர்களின் பிரச்சினை எந்தவகையிலும் தீர்ந்தபாடில்லை. எனவே தமிழீழத்தை இந்திய அரசு அங்கீகரித்து அங்கு வாழும் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க முன் வரவேண்டும் என்றும் விடுதலைச் சிறுத்தை அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தில் தமிழகம் வெகுவாக விழித்தெழுந்துள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அனைத்துத் தமிழகத் தலைவர்களும் ஒருமித்துக் குரல் கொடுத்து வருகின்றனர்.

எனவே இதனை மத்திய அரசு புரிந்து கொண்டு ஈழத்தமிழர்களைக் காக்க முன் வரவேண்டும் என்றும் அவர் சொன்னார். அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் தமிழ் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடன் மகிந்த பேச்சு

(கொழும்பு)

ஜே.வி.பியை மீண்டும் அனைத்துக் கட்சிக் குழுவில் இணைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக ஜே.வி.பியினருடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிபுணர் குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து இலங்கையைப் பிரிப்பதற்கு அரசு உடன்படுகின்றது எனக் கூறி ஜே.வி.பி. அனைத்துக் கட்சிக் குழுவிலிருந்து வெளியேறியது.

ஜே.வி.பி.தனது கட்சிக்குள் இருந்து வெளியேறியதால் மகிந்த மிகவும் கவலையடைந்ததாக அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது அவர்களை மீள இணைப்பதில் மகிந்த கடும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தேங்காய், உருளைக்கிழங்கு கப்பலில் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கு ஒருதொகுதி தேங்காய் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றைக் கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் தேங்காய் ஒன்று 80 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதுடன் மரக்கறிகளும் உச்ச விலையில் விற்பனை செய்யப்படுவதையடுத்துக் கப்பல் மூலம் இத்தகைய பொருள்களை எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

37 ஆயிரம் தேங்காய்கள் கப்பல் மூலம் கொண்டு வருவதன் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேசத்தின் குரல் பாலாவின் நினைவுச் சுவடுகளிலிருந்து...



விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்



இலங்கை அரசியல் பிரமுகர்களுடன் பாலா...



வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

## ஜனாதிபதியின் வாகனத்தை படமெடுத்த தூதரக அதிகாரி

(கொழும்பு)

பிரித்தானிய தூரகத்தின் புதிய அதிகாரி டாம் ஓவன்எட் மண்ட்ஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாகனத்தை அறியாது படம் எடுத்துள்ளார்.

இதனையடுத்து பிரித்தானியா மன்னிப்புக் கேட்டுள்ளது. தூதரகத்தின் அரசியல் மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்குத் தலைவரான டாம் ஓவன்எட்மண்ட்ஸ் ஜனாதிபதியின் வாகனத்தைத் தனது கைத் தொலைபேசியில் படம் எடுத்தது சர்ச்சையைக் கிளப்பியது.

அந்த அதிகாரி பொலிஸ் நிலையத்துக்கு விளக்கமளிக்க அழைக்கப்பட்டார். கைத் தொலைபேசியில் அவர் எடுத்த படத்தைப் பொலிஸார் பார்வையிட்டனர்.

படம் எடுத்ததற்கான காரணத்தை அவர் விளக்கிய பின்னர் அவர் வெளியில் செல்ல பொலிஸார் அனுமதித்துள்ளனர் என்று தூதரகப் பேச்சாளர் கூறினார்.

அந்த அதிகாரி இலங்கைக்கு புதிதாக வந்திருக்கின்றார். அவர்தெரியாமல் தவறு செய்து விட்டார். தமது சொந்த சேமிப்புக்காக அவர் அந்தப் படத்தை எடுத்தார். வேறு எந்தக் காரணத்துக்காகவும் அவர் படம் எடுக்கவில்லை.

இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிக்கின்றோம் என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (எ-1)

## வாகரையில் 2-வது தடவையாக புலமைப் பரிசில் பரீட்சை ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

வாகரை மற்றும் கதிரவெளிப் பரீட்சை நிலையங்களில் நேற்று நடைபெறவிருந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சை நடைபெறவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையங்களுக்குச் சமுகமளிக்காமையினாலேயே இந்தப் பரீட்சை திட்டமிட்டபடி நடத்த முடியவில்லை என ஆணையாளர்நாயகம் தெரிவித்தார்.

இந்த இரு பகுதிகளிலும் இந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கான பிறிதொரு திகதி குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என்று அவர் கூறினார்.

கதிரவெளி மற்றும் வாகரைப் பிரதேசங்களில் இந்தப் பரீட்சை இரண்டாவது தடவையாகப் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

## புனித தோமையார் திருவிழா

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு புனித தோமையார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருட்திரு. எக்ஸ்.டபிள்யூ.ஜேமிஸ் அடிகளார் தலைமையில் திருநாள் திருப்பலியும் புனிதரின் சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெற்று திருவிழா நிறைவு பெறும். (ச-72)

## 35 கிளைகள் தொடர்ந்து இயங்கும்

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் கிளைகளில் தற்போது ஏற்படுத்தப்பட்ட விசேட கிளைகள் மூடப்பட்ட நிலையில் இவ்வாரம் முதல் 35 கிளைகள் மட்டுமே இயங்கும் என யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்தார்.

அனைத்தும் சாதாரண கிளைகளாக இயங்குவதுடன் நல்லூர்ப் பிரதேச பிரிவில் 12 கிளைகளும் யாழ்.பிரதேச பிரிவில் 19 கிளைகளும் ஏனைய நான்கு கிளைகளும் இவ்விரண்டு பிரிவிற்கும் பொதுவாக இயங்கும் என அவர் மேலும் கூறினார். (ச-133)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

ஊர்காவற்றுறை மத்தி அன்னை வேளாங்கண்ணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக கீழ்க் காணப்படுபவர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் அ.இ.கு.மரியதாஸ், செயலாளர் எஸ்.யூட், பொருளாளர் லாசர் வின்சன்ற் மற்றும் பத்துப் பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(ச-72)

## தற்காலிக பணிபுரிந்தவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

அரசாங்கத்திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்கள் மற்றும் அமைச்சுக்களின் தற்காலிக ஒப்பந்தத் திட்டத்தின் கீழ்ப் பணிபுரிபவர்களை நிரந்தர சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கான சுற்று நிருபத்தை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டிருக்கின்றது.

அமைச்சரவையின் அனுமதிக்கு இணங்க கடந்த நவம்பர் முதலாம் திகதிவரை தொடர்ச்சியாக 180 நாட்கள் பணிபுரிந்த கனிஷ்ட தரத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் வகித்து வந்த பதவிகளில் நிரந்தரமாக்கப்படுவர். அதேவேளை அரசாங்க நிபந்தனைக்கு அமைய உரிய தரங்களைக் கொண்டவர்கள் குறிப்பிட்ட இந்தத் திகதியில் 45 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-133)

## ரணில் விக்கிரமசிங்க-ராதிகா நியூயோர்க்கில் சந்திப்பு

(வாஷிங்டன்)

சிறுவர்களும் ஆயுத முரண்பாட்டிற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி ராதிகா குமாரசாமியை மீண்டும் நியமிப்பது தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிறப்புச் சந்திப்பு ஒன்றை அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

நியூயோர்க் சென்றுள்ள எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கைக்கான ஐ.நாவின் பிரதிநிதி பிரசாத் காரியவாசம் சிறப்பு விருந்துபசாரம் ஒன்றை வழங்கியுள்ளார். அவரது இல்லத்தில் நடைபெற்ற இந்த விருந்துபசாரத்துக்கு ராதிகா குமாரசாமியும் மற்றும் முன்னாள் இந்தியத் தூதுவர் நிருபம் சென் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது ராதிகா குமாரசாமியையடுத்த 5 வருடங்களுக்கு சிறுவர்களும் ஆயுத முரண்பாட்டிற்குமான ஐ.நாவின் விசேட பிரதிநிதியாக நியமிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுகுறிப்பிடத்தக்கது. (ச)

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் விசேட தடுப்பு மருந்து ஏற்றுதல் யாழ்.மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் நாளைக் காலை 8.30 மணிக்கு ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. 11 மணிக்கு வை.ஏ.சி.ஏ.சனசமூக வளாகத்திலும் பிற்பகல் 2 மணிக்கு பாரதி சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 20 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வளன்புரம் மாதர் சங்கத்திற்கு முன்னாலும் 11 மணிக்கு சுண்டுக்குளி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2 மணிக்கு திருமகள் சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (ச)

> உலகில் உள்ள எல்லா உயிர்களிலும் மனிதன் ஒருவன் தான் கருணை காட்டிக் கஷ்டம் தாங்கித் தியாகம் செய்யும் ஆற்றலுடையவன்.
>
> -டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# கடிதம் அனுப்பி வைத்து பிரச்சினையைத் தீர்க்க முடியாது

இலங்கையில் தமிழ் மக்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் எழுதியுள்ளதாக சோனியா காந்தி அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு தமிழகச் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே சோனியா காந்தி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுமாறு தமிழக சட்டசபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பதும் அதற்கான பதிலை முதல்வர் கருணாநிதிக்கு மத்திய அரசு அனுப்பி வைப்பதும் சாதாரண நடைமுறைகள்.

இதில் பெரிதாக முன்னேற்றம் எதுவும் இல்லை. ஆனால் இதில்இருக்கக்கூடிய வேடிக்கை என்னவெனில்,

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்தவுக்கு சோனியா காந்தி கடிதம் அனுப்பி வைத்துள்ளாராம்.

கடிதம் அனுப்பி இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்றால் அது எப்போதோ நடந்து முடிந்திருக்கும்.

கடிதத்துக்கு கடிதம் என்ற கதை எல்லாம் முடிந்து பல வருடங்களாகிவிட்டன. எழுதப்பட்ட ஒப்பந்தங்களே கிழித்தெறியப்பட்டு விட்டன.

கூடவே வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் இலங்கை- இந்திய ஒப்பந்தத்துக்கு முடிபு கட்டும் வகையில் உயர் நீதிமன்றத்திடமிருந்து அனுமதியும் பெற்றாகிவிட்டது.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கூறி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்புவது நேரத்தை வீணடிக்கும் செயலேயன்றி வேறில்லை.

இலங்கை விடயத்தில் தலையிடுவதாயின் அதற்கு முன்னதாக பழைய வரலாற்றை ஒருகணம் திரும்பிப் பார்த்தல் தேவையானதாகும்.

1983களில் அப்போது ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை இந்தியாவுக்கு அழைத்த அன்னை இந்திரா காந்தி ஜே.ஆரை எச்சரிக்கை செய்தார். உடனடியாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கண்டிப்பான உத்தரவிட்டார்.

அதுவே இலங்கை அரசுக்கு செய்ய வேண்டியதாகும். இதைவிடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் கடிதம் அனுப்புவதெல்லாம் பயனற்றவையாகும்.

# வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை

வடக்குக்கிழக்குப் பிரச்சினைக்கு நிபுணர்கள் குழுவினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைக்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பியுள்ள ரணில் விக்கிரம சிங்க இன்று அல்லது நாளையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துத் தமது நிலைப்பாடு குறித்துத்தெரிவிப்பார் என எதிர்பார்ப்பதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

11 பேர் அடங்கிய நிபுணர் குழு சமர்ப்பித்த தீர்வு யோசனை பகிரங்கப்படுத்தப்பட்டதையடுத்து அந்த அறிக்கை நாட்டைப் பிளவடையச் செய்வதாகக் கூறி ஜே.வி.பி.அனைத்துக் கட்சிக் குழுவிலிருந்து விலகியது.

ஜாதிக ஹெலஉறுமயவும் இதற்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்திருப்பதுடன் விடுதலைப்புலிகளுக்குச் சார்பானதாகவே நிபுணர் குழுவின் அறிக்கை அமைந்திருப்பதாக குற்றஞ்சாட்டியது.

இந் நிலையில் அமெரிக்கா சென்றிருந்த எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது நிலைப்பாடு தொடர்பாக அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் நிக்கிலஸ் பேர்ண்ஸ் மற்றும் துணைச் செயலாளர் றிச்சட் பௌச்சர் ஆகியோரிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜே.வி.பி. அரசிலிருந்து விலகும்பட்சத்தில் தாம்அரசுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அமெரிக்காவில் ரணில் தெரிவித்துள்ளார்.

நாடு திரும்பியவுடன் மகிந்தவைச் சந்திக்கவுள்ள ரணில் அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பாகவும் கலந்துரையாடுவார் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் தங்கியிருந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெயீம், யப்பானின் சிறப்புப் பிரதிநிதி யசூசி அகாஷி ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த நிபுணர்குழுவின் அறிக்கையைக் கொண்டு மறுசீரமைப்பு நடவடிக்கையை முன்னெடுக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதாக தெரியவந்துள்ளதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (எ-5)

# இராணுவத்துக்கான செலவுகள் தேவையற்றவையல்ல- ஜனாதிபதி

(கொழும்பு)

இராணுவதிற்கான செலவு தேவையற்ற செலவல்ல என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலங்கைக்கான வெளிநாட்டு அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை அவசர அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திறைசேரிச் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர மற்றும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் ஹப்ரால் ஆகியோரும் பங்கேற்றனர்.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்; இராணுவத்துக்கான செலவு தற்போது அதிகரித்துள்ளது. எனினும் இதுதேவையற்ற செலவல்ல.

தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் உல்லாசப் பயணிகளின் வருகை குறைவு என்பன வெளிநாட்டு அந்நிய செலாவணியை குறைத்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை எந்தளவுக்கு விரைவாக முடிவுக்குக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு விரைவாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (எ-5)

# வாகரைப் பகுதியிலிருந்து 13ஆயிரம் பேர் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் அரசாங்கப் பிரதேசத்துக்குக் கடந்த ஒரு மாத காலப் பகுதியில் சுமார் 13 ஆயிரத்து 220 பேர் வாகரைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்ததாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சி.புண்ணியமூர்த்தி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதில் கடந்த மூன்று தினங்களில் மாத்திரம் 3 ஆயிரத்து 446 பேர் இவ்வாறு வந்து சேர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் செங்கலடி, வாழைச்சேனை, கிரான், மட்டக்களப்பு, ஆரயம்பதி மற்றும் களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ள தாகப் புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவர்கள் ரெதிதென்ன, ஓமடியாமடு ஊடாக வெலிக்கந்தைக்கு வந்த பின்னர் ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் மட்டக்களப்பு அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை இடம்பெயர்ந்தோரில் எத்தனை பேர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என விபரங்கள் தற்போது கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன.

அவர்களைத் தங்க வைப்பதற்கான காணிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை போதுமானவையல்ல. குடியியலமைப்புக்குப் பொருத்தமான காணிகளாக இருக்கவேண்டும். ஆனால் இவற்றை அடையாளம் காண்பது பெரும் சிரமமாகவுள்ளதாகவும்,

அநேகமான பாடசாலைகள் மீண்டும்ஆரம்பிப்பதற்கு முன்னர் அவர்களைக் கொண்டு சென்று தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இதுவரை சுமார் 8 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் எமது பகுதிகளில் உள்ளனர் என்றும்,

இவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுகின்றது. பத்துப் பாடசாலைகளில் அவர்கள் தங்கியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதனால் சிரமப்படத்தான் வேண்டும். திடீரென இவர்கள் வந்ததால் உடனடியாக எந்தவித வசதிகளும் செய்து கொடுக்க முடியாதுள்ளது.

இவர்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு மலசல வசதிகளும் குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படுவாதாக அரச அதிபர் தெரிவித்தார். (ச-133)

# 21 வயதுக்குக் குறைந்தவருக்கு சிகரெட் விற்றவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம்

21 வயதுக்குக் குறைந்தவருக்கு சிகரெட் விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு தென்தெனியா நீதிமன்ற நீதிவான் 4 ஆயிரம் ரூபா அபராதம் வித்துள்ளார்.

கண்டி மது வரித் திணைக்கள அதிகாரிகள் கெங்கல்ல- திகண, தெல்தெனிய போன்ற பிரதேசங்களில் திடீர்ச்சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

அச் சோதனையின் போது அரசாங்கத்தின் தடைச் சட்டத்தையும் மீறி வர்த்தகர் ஒருவர் 21 வயதுக்கு குறைவான ஒருவருக்கு சிகரெட் விற்பனை செய்த போது இவ்வதிகாரிகள் இதனைக் கையும்மெய்யுமாகக் கண்டுபிடித்தனர்.

இவ்வாறு அரசாங்கத் தடைச் சட்டத்தை மீறி சிகரெட்டை விற்பனை செய்த கெங்கல்ல நகரைச் சேர்ந்த வர்த்தகருக்கு எதிராக தெல்தெனிய நீதிமன்றத்தில் மது வரித் திணைக்கள அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணையின் போது நீதிவான் சாலிய பெரேரா வர்த்தகரை குற்றவாளியாகக் கண்டு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். (எ-1)

# 650 மெற்றிக்தொன் மாவுடன் ஜென்கிளிப்பர் கப்பல் பரு.துறையில்

## மா இறக்கப்பட்டவுடன் விநியோகம்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு விநியோகிப்பதற்காக 650 மெற்றிக்தொன் மாவுடன் ஜென்கிளிப்பர் கப்பல் பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இம் மா நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.பருத்தித்துறைத் துறைமுகத்தில் ஏற்கனவே கப்பலில் எடுத்து வரப்பட்ட சவர்க்கார வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் தற்போது இறக்கப்பட்டு வருகின்றது.

அவை இறக்கப்பட்டதும் உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிபர் தெரிவித்தார். இதேவேளை பொருள்கள் இறக்கப்பட்டு வருவதனை நேற்று நேரில் சென்று அவதானித்த அரச அதிபர் க.கணேஷ், கடல் கொந்தளிப்பின் மத்தியில் கஷ்டத்தில் தொழிலாளர்கள் கப் பலில் இருந்து பொருள்கள் இறக்கி வருவதை வேதனையுடன் தெரிவித்தார். அவர்களின் முயற்சி குறித்து அவர் பாராட்டையும் தெரிவித்தார். (ச-5)

# பங்கீட்டு அட்டை மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகப் பிரிவுக்குட்பட்ட நாவாந்துறை தெற்கு, நாவாந்துறைவடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பங்கீட்டு அட்டைகள் நாளை காலை 9 மணி தொடக்கம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் வைத்து மீளாய்வு செய்யப்படவுள்ளது.

இதேவேளை ஜே/79, ஜே/80 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பங்கீட்டு அட்டைகள் கன்னாதிட்டியில் உள்ள சயன்ஸ் கோல் மண்டபத்தில் நாளைக் காலை 9 மணிக்கு மீளாய்வு செய்யப்படும் என யாழ்.பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ச)

# சந்திரிகாவின் நியமனத்தை யுனெஸ்கோ இடைநிறுத்தியது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் தென்னாசியாவுக்கான கல்வி விஞ்ஞான மற்றும் கலாசாரப் பணிப்பாளராக நியமனம் பெற்றிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நியமனத்தை யுனெஸ்கோ இடைநிறுத்தியுள்ளது.

இவரின் நியமனம் தொடர்பாக இலங்கையிலும் சர்வதேச நாடுகளிலும்உள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் தொடுத்த முறைபாடுகளின் அடிப்படையில்தான் இந்த நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடுகள் தொடர்பான உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

ஆசிய நாடுகளுக்கு இவர் மேற்கொள்ளவிருந்த பயணங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ச-1)

# பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வரை எமது வீடுகளுக்குத் திரும்பமாட்டோம்

## இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்குரிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படும்வரை தமது இருப்பிடங்களுக்கு செல்ல முடியாது என அண்மையில் இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து இடம்பெயர்ந்துள்ள சேருநுவர மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த சிங்கள மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதியிலிருந்து எமது பகுதிகளில் எறிகணை விழுகின்றன. ஆரம்பத்தில் எமது கிராமத்தையும் அதனை அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

அப்போது பதுங்கு குழிகளிலிருந்தோம். ஆனால் இப்போது தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. குண்டுகள் எல்லா இடமும் வீழ்ந்து வெடிக்கின்றன.

ஆறு குடும்பத்தைத் தவிர ஏனைய அனைவரும் அங்கிருந்து வெளியேறி விட்டோம் என அப்பகுதி வாசி ஒருவர் தெரிவித்தார்.

எமக்குப் போதுமான உணவு கிடைக்கின்றது. இங்குள்ளவர்கள் சமைத்த உணவைக் கொடுக்கின்றனர். அது தவிர உதவிநிறுவனங்கள் படுக்கை விரிப்புப் போன்றவற்றை வழங்குகின்றனர்.

எமக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்படும்வரை நாம் மீண்டும் எமது கிராமங்களுக்குத் திரும்ப மாட்டோம் என்றார் அவர். (ச)

# பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் நியமனம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் நியமனங்களை வழங்கும் திட்டத்தை துரிதப்படுத்தப்போவதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த தெரிவித்துள்ளார்.

கஷ்டப் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த நட வடிக்கையை எடுப்பதாக அவர் கூறினார்.

கஷ்டப் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுவதாக பல வருடங்களாக முறையிடப்பட்டு வருகின்றது. இதனால் கிராமப் புறத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதன் மூலம் கஷ்டப் பிரதேச ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக அமையும் என நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற செயலமர்வின் போது கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ச-133)

# மோசடியில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அரச அதிபர் எச்சரிக்கை

பொதுமக்களுக்கு வழங்கப்படும் பல விதப் பொருள்கள் மோசடி செய்யப்படுவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இம் மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றை மேற்கொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் உர வகைகளுக்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு கப்பலில் எடுத்து வரப்பட்ட உரங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் இவ்வழங்கலில் மோசடிகள் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் கால்நடைத் தீவனங்கள் விநியோகத்திலும் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இம் மோசடிகள் தொடர்பாக நாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அரச அதிபர், மோசடிகள் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மிகவும்சிரமத்தின் மத்தியிலும் எடுத்து வரப்பட்ட இப்பொருள்கள் மோசடி செய்யப்படுவது குறித்து கவலை தெரிவித்தார். (ச-5)

# வாகரையில் இருந்து இடம்பெயர்ந்த 15 ஆண்களை விசாரணைக்கென கைது

(மட்டக்களப்பு)

வாகரைப் பகுதியிலிருந்து தாக்குதல் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து வந்து தோப்பூர், செல்வநகர்ப் பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள 47 குடும்பங்களில் 15 ஆண்கள் விசாரணைக்கென சேருநுவரப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

வாகரையில் இரு தினங்களுக்கு முன் பல வண்டிகளில் காட்டு வழியாக வந்த இக் குடும்பங்கள் படையினரின் விசாரணைக்குப் பின் தோப்பூர், செல்வநகரிலுள்ள பாடசாலை ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு வந்தவர்களில் 15 ஆண்கள் சேருநுவரப் பொலிஸாரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டதாக மூதூர் பிரதேச செயலர் எம்.சி.எம்.சரீப் தெரிவித்துள்ளார்.

அவர்களின் விடுதலைக்கு உதவுமாறும் இம் மக்கள் வேண்டியுள்ளனர். மூதூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இம்மக்களில் 146 பேர் இவ்வாறு தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 15 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். இதேவேளை இங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் அப்பகுதியில் தொடர்ந்தும் தங்கியிருக்க அச்சம் தெரிவித்ததனால் இவர்களை வேறு இடம் மாற்றுவது தொடர்பாக மூதூர் பொலிஸ் அத்தியட்சகரிடம் தான் தொடர்பு கொண்ட போதும் உடனடியாக அதற்கான சந்தர்ப்பம் இல்லை என பொலிஸார் தெரிவித்ததாகவும் சில தினங்களின் பின்னரே இது தொடர்பில் முடிபு செய்ய முடியும்எனக் கூறியதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார். (ச)

# ஜானக பெரேராவை பாதுகாப்பு அமைச்சின் துணைச் செயலாளராக நியமிக்கத் திட்டம்

இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜானக பெரேராவிற்கு பாதுகாப்பு அமைச்சின் துணைச் செயலாளர் பதவி அல்லது அதற்கு இணையான பதவி நிலை ஒன்று வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நீண்ட காலம் இலங்கையில் இருந்திருக்கவில்லை. மற்றும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நுட்பங்கள் குறித்துப் போதிய அனுபவங்களைப் பெற்றிராமை ஆகியவற்றால் அவருடைய செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாக இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து விடுதலைப்புலிகளின் தாக்குதல் தந்திரோபாயங்கள் குறித்து விசாலமான அறிவு மற்றும் அனுபவம் கொண்ட ஜானக பெரேராவை வரவழைத்து அவருடைய ஆலோசனைகளைப் பெறுவதற்கு கோத்தபாய ராஜபக்ஷவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது. (ச)

## குறிகாட்டுவான்...

இது தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டுள்ளதாக கூறப்பட்டது.

இதேவேளை தற்போதைய சூழ்நிலையில் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் புகையிலை,வெங்காயம்,...ராட்சை போன்ற விளை பொருள்களை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்ப விரும்பும் உற்பத்தியாளர்களை யாழ்.புனர்வாழ்வுப்பிரிவிடம் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தேங்காய், உருளைக்கிழங்கு...

மூலம் குடாநாட்டு மக்களின் தேவையை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் மாவட்டத்தில் இயங்கும் 14 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் முகாமையாளர்கள் யாழ்.அரச அதிபரைச் சந்தித்த போதே இம்முடிபுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் குடாநாட்டு மக்களின் தேவைக்காக உணவுப் பொருள்களான ஆட்டா மா, உழுந்து, பயறு, கௌபி, கடலை, மல்லி, செத்தல் மிளகாய், தேயிலை, கோப்பி, சவர்க்கார வகைகள், பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், பேனைகள் போன்றவற்றை எடுத்து வருவதற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதில்கலந்து கொண்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கோரியுள்ளனர். (ச)

## ஈழப் பிரச்சினை...

மக்களை நசுக்கி வரும்இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆயு[ ] உதவிகள் எதனையும் வழங்குவதில்லை என இந்திய மத்திய அரசு முடி பெடுத்துள்ளது.

இந்திய காங்கிரஸின் தலைவியான சோனியா காந்தி இது விடயத்தில் தெளிவாகவுள்ளார். இலங்கையில் வாடும் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளில் இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கப்படமாட்டாது என்று கூறியிருக்கின்றார்.இது ஒரு நல்ல முன்னேற்றகரமான விடயமாகும்.

முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு மீண்டும் இலங்கை விவகாரத்தில் இந்தியா கூடிய அக்கறை கொண்டுள்ளதை இது காட்டுக்கின்றது.

ஈழத் தமிழர்கள் அனுபவித்து வரும்இன்னல்கள் குறித்து தமிழகம் மாத்திரமல்ல மத்திய அரசும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. (ச-5)

## குடும்பஸ்தர்...

தந்தையான தனபால (வயது -52) என்ற குடும்பஸ்தரே கொல்லப்பட்டவராவார்.

குறித்த குடும்பஸ்தர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் எனவும் திருமணம் முடித்துப் பல காலமாகப் பாண்டியன்தாழ்வில் வசித்து வருவதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## ஜே.வி.பியுடன் மகிந்த...

பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் மகிந்தவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் சந்திப்பு ஒன்றும் நடைபெற்றது. எனினும் நிபுணர் குழுவின் தலைவர் தர்ம சிறி பீரிஸ் தனது பதவியிலிருந்து விலகிய பின்னரே இச் சந்திப்பு நடைபெற்றது.

இவ் நிபுணர் குழு தற்போது செயலிழந்த ஒரு குழுவாகவே இருக்கின்றது. விடுதலைப் புலிகளும் பிரபாகரனுமே அரசின் பிரதான எதிரிகள் என தெரிவித்துள்ள மகிந்த, தெற்கில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதே அரசின் கொள்கை எனவும் ஜே.வி.பியினருக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அரசுக்கு ஜே.வி.பியின் உதவி தேவை எனவும் தென்னிலங்கையின் ஒற்றுமையின்மைமையை விடுதலைப்புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி விடுவர் எனவும் தெரிவித்துள்ளதாகவும்அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## பெப்ரவரியில் மீண்டும்...

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒக்டோபரில் 28,29 ஆம் திகதிகளில் சுவிஸில் இறுதியாக சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதில் எவ்வித இணக்கமும் காணப்படவில்லை.

இந்நிலையில் ஏ-9 பாதையை திறந்தாலே அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்வதுகுறித்துத் தீர்மானிக்கப்படும் என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

அதேவேளை ஏ-9 பாதையைத் திறப்பது சாத்தியப்படாது என அரசு உடனடியாக அறிவித்தது. இதையடுத்து இரு தரப்பினரும் அப் பேச்சுக்களில் எவ்வித முடிபுகளும் எட்டப்படாத நிலையில் நாடு திரும்பினர்.

இதேவேளை தமிழர் பகுதிகளில் விமான எறிகணைத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. யாழ்.குடாநாட்டில்மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு அரசு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து சமாதானச் செயலகம் நோர்வேத் தரப்பினருடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சுக்கள் குறித்துஆராய நோர்வேத் தரப்பினர் ஜனவரியில் இலங்கை வந்து அரசு,விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவர் எனவும் கூறப்பட்டது.

எனினும் உத்தியோகபூர்வமாக இருதரப்பினரும் எவ்வித தகவலையும் வெளியிடவில்லை. இது இவ்வாறிருக்க, அரசுக்கும் விடுத லைப்புலிகளுக்குமிடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஜனவரியில் இடம்பெறும் என அரச பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பி.பி.ஸிக்கு அளித்த நேர்காணலில் ஒக்டோபர் மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கை இராணுவத்துக்கு...

அப்போது அவர் கூறியதாவது,

இந்திய இராணுவம் அதி நவீனப் போர்க் கருவிகளைக் கேட்டு வருகின்றது. இராணுவத்துக்கு அதி நவீன ஆயுதங்கள் வழங்க வேண்டும் என்பதுதான்எங்கள் விரும்பம்.

எனவே தற்போது பேச்சுவார்த்தை நிலையில் உள்ள ஆயுதக்கொள்முதல் திட்டங்களைவிரைவாக மேற்கொள்ளும்படி நான் உத்தரவிட்டுள்ளேன்.

விமானப்படைக்கு விரைவில் 126ரக போர்விமானம் வாங்கப்படும். மேலும் ஆயுதக் கொள்முதலில் நிறையச் சீர்திருத்தங்கள் கொண்டு வருவது பற்றி பரிசீலித்து வருகின்றோம்.

ஆயுதக் கொள்முதலில் வெளிப்படையான அணுகுமுறை பின்பற்றப்படும். ஊழல் வாதிகள் அகற்றப்படுவார்கள். இலங்கை இராணுவத்துக்கு ஆயுதப் பயிற்சி எதுவும் அளிக்கவில்லை.

அப்படி ஒரு திட்டமே இல்லை. இலங்கைக்கு நிர்வாகப்பயிற்சிதான் அளிக்கப்பட்டது. இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து கூட்டுப் பயிற்சி நடத்தும் திட்டமில்லை என்றார் அவர். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.